அசல் வழக்கு எண்: 197/2022

DEPOSITION OF WITNESS: P.W.2

| | |
|---|---|
| பெயர் | முத்துகிருஷ்ணன் |
| தந்தை பெயர் | கோவிந்தசாமி |
| வயது | 72 |
| கிராமம் | படவேடு |
| வட்டம் | போளூர் |
| தொழில் | விவசாயம் |

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 03rd day of March 2026

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி தரப்பு 2வது சாட்சி ஆவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்திற்கு நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். ஆவணங்கள் ஏதும் இல்லை.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதிக்கும் எனக்கும் எந்த உறவும் கிடையாது. நாங்கள் ஒரே ஊர்காரர்கள். வழக்கு சொத்திற்கும் நான் குடியிருக்கும் இடத்திற்கும் இடையே சுமார் 500 மீட்டர் தூரம் இருக்கும். வழக்கு சொத்திற்கு அருகே எனது நிலம் கிடையாது என்றால் சரிதான். எனக்கு இந்த வழக்கில் வாதி தரப்பில் சாட்சி சொல்ல சம்மன் வந்ததா என்றால் இல்லை. இந்த வழக்கு வாதி சாட்சி சொல்ல அழைத்ததால் நான் நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல வந்தேன். நான் நீதிமன்றத்திற்கு யார் கூப்பிட்டாலும் சாட்சி சொல்ல செல்வேனா என்றால் இல்லை. பொதுவாக நான் பண பலன் பெற்றுக்கொண்டு யார் கூப்பிட்டாலும் உரிமையியல் நீதிமன்றத்தில் சாட்சி சொல்வது உண்டு என்றால் சரியல்ல. நான் எங்கள் ஊர் கவுண்டர் ஆவேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

**நீதிமன்ற கேள்வி** – அந்த ஆவணத்தில் உள்ளவாறு பஞ்சாயத்து பேசப்பட்டு எழுதப்பட்ட ஆவணத்தில் சாட்சி கையெழுத்து போட்டேனா என்றால் பஞ்சாயத்து நடந்தது. நான் தான் அதில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன்.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

மேற்கண்ட ஆவணம் **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்கண்ட ஆவணத்தில் வாதி ஆறுமுகம் மற்றும் பிரதிவாதிகளும் கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா

சொத்தை சின்னகுழந்தையின் வாரிசுகள் அனுபவித்து வருகிறார்கள். உண்மையில் எனக்கு இந்த வழக்கு குறித்து எந்த விவரமும் தெரியாது என்றும் வாதி கேட்டுக்கொண்டதன் பேரில் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா ஆ–அட்டவணை சொத்தை பொருத்து யசோதா பெயரில் தான செட்டில்மெண்ட் மற்றும் உயில் எழுதப்பட்டது என்ற விவரம் அதெல்லாம் எனக்கு தெரியாது. இந்த தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்பதால் இந்த வழக்கு வாதிக்கு தாவா சொத்தில் பங்கு கிடைக்க தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மற்ற பிரதிவாதிகள் தோன்றா தரப்பினராக அறிக்கப்பட்டுள்ளதால் குறுக்கு விசாரணை இல்லை.**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/- S. Senthilbabu,<br>சார்பு நீதிபதி,<br>போளூர். |